விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 032 வள்ளுவர் ஆண்டு 2054 தை 06 வெள்ளிக்கிழமை (20.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

### கோரம் இல்லாததால்
## யாழ்.மாநகர முதல்வர் தெரிவு ஒத்திவைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை முதல்வர் தெரிவுக்கு சபையில் கோரம் இல்லாததால் சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி ஆணையாளர் நியாயமற்று நடக்கிறார்
### சட்டநடவடிக்கைக்கு செல்லவுள்ளதாக சபை உறுப்பினர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்கான இடைக்கால முதல்வர் தெரிவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நியாயமற்ற விதத்தில் நடந்து கொண்டுள்ளார் என்று குற்றஞ் சாட்டியுள்ள யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் 20 பேர், உள்ளூராட்சி ஆணை யாளர் தன் தவறை நிவர்த்தி செய்யத் தவறினால் சட்டநடவடிக்கைக்குச் செல்லவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒத்திவைப்பு முறையற்றது என ஆட்சேபித்து நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றிய 20 உறுப்பினர்கள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநருக்கும் யாழ் மாநகர சபையின் செய 11

### தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படும்
# நல்லிணக்கத்துக்கான சிறந்த தருணம் இது
## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படும் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லிணக்கத்துக்கான சிறந்த தருணம் இது என சுட்டிக்காட்டியுள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

### நாடளாவிய ரீதியில்
## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி 11

### நாயன்மார்கட்டு குளத்தில்
## பெண் ஒருவரது சடலம் மீட்பு



(யாழ்ப்பாணம்)

அரியாலை நாயன்மார்கட்டு குளத்தில் இருந்து பெண் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

11

## தேர்தல் செலவு சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தும் விதிகளை உள்ளடக்கிய தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டமூலம் 61 மேலதிக வாக்குகளால் 11

## புலிகளை பிளவுபடுத்தவே நிதியுதவி வழங்கப்பட்டது
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடமிருந்து மாத்தையா, யோகி ஆகியோரை பிளவுபடுத்தவே எனது தந்தையின் காலத்தில் சில உதவிகள் செய்யப்பட்டன என எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி 02

### ஹெரோயினுடன்
## யாழ்.நகரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

100 கிராம் ஹெரோயினுடன் யாழ்ப்பாணத்தில் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து 11

## இந்திய வெளிவிவகார அமைச்சர் தமிழ்த் தலைவர்களுடன் இன்று பேச்சு

இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களையும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனையும் ஒன்றாக சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இன்றுகாலை 11.45 மணியளவில் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில்குறித்த சந்திப்பு நடைபெறும்.(ம-7)



### தொடர்ச்சியாக ஹெரோயின்
## போதைப்பாவனை
### யாழில் இளம் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியான ஹெரோயின் போதைப் பாவனைக்கு அடிமையாகியிருந்த ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம், வரணி இயற்றாலையைச் சேர்ந்த 37 வயதுடைய குடும்பத் தலைவரே உயிரிழந்தவராவார்.

இவர் இரு பிள்ளைகளின் தந்தை 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளை...

வித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற தேர்தல் செலவீனத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அதில் ஒரு கட்டத்தில் தன்னால் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வரும் பேருந்துகள் மற்றும் உதவிகள் தொடர்பில் பட்டியலிட்டார்.

இதன்போது குறுக்கிட்ட அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க, உங்கள் தந்தையான பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு திறைசேரி ஊடாக காசோலைகள் வழங்கப்பட்டன.

அதற்கு நன்றிக்கடனாகவே தற்போது வெளிநாடுகளில் உள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் உங்களுக்கு நிதி உதவி அளிப்பதாகவும் அதனை வைத்துத்தான் நீங்கள் இவ்வாறு பேருந்துகளை அன்பளிப்பு செய்வதாகவும் மக்கள் பேசிக்கொள்கின்றனர் என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பெயர்ட்பவர் என்பவர் ஹிட்லரின் படைகளுக்கும் முசோலினியின் படைகளுக்கும் ஆயுதங்கள்ள வழங்கி உதவினார். இது இரு அணியிலுள்ளவர்களையும் பிளவு படுத்தும் தந்திரம்.

அதேபோன்றுதான் விடுதலைப்புலிகள் அமைப்பில் அதன் தலைவர் பிரபாகரனோடு மாத்தையாவும் யோகியும் முரண்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் சில உதவிகளை வழங்கி அவர்களை மேலும் பிளவுப்படுத்ததும் போர் தந்திரம் செயற்படுத்தப்பட்டது.

விடுதலைப்புலிகளுக்கு எனது தந்தை காசு கொடுத்தது என்றால் 2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவும் விடுதலைப்புலிகளுக்கு காசு கொடுத்துத்தான் தேர்தலில் வெற்றி பெற்றார் இதனை இல்லை என்று மறுக்க முடியுமா என்றார். (ம-7)


### வேலைக்கு ஆட்கள் தேவை

**செய்தி வாசிப்பாளர், வீடியோ எடிட்டர், நிகழ்ச்சி தொகுப்பாளர்**

**தொடர்புகளுக்கு : 076 126 6682**

(14335)



### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை **675,000** ரூபாய் மட்டும்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்


(14332)

**077 814 7389, 077 986 5457**


## மரண அறிவித்தல்

### செல்வநாயகம் தர்மசீலன்

**(BSc. Physical Science)**



தோற்றம் 06 • 10 • 1980 — மறைவு 18 • 01 • 2023

**அச்சுவேலி தெற்கை பிறப்பிடமாகவும், Burges Road, East Ham, London, Uk, இனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் தர்மசீலன் அவர்கள் கடந்த 18.01.2023 அன்று இறைபதம் அடைந்தார்.**

**அன்னார் செல்வநாயகம் - பாக்கியலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மகனும், தையிட்டி தெற்கைச் சேர்ந்த செல்வரட்ணம்-சறோயினி தம்பதிகளின் அன்பு மருமகனும், ரெனீசியாவின் அன்புக் கணவரும், தெய்வீகனின் பாசமிகு தந்தையும், சதீஷ், ரெனீஸ், தினேஸ் ஆகியோரின் மைத்துனருமாவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.01.2023 திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (14323)

தகவல் :- குடும்பத்தினர், தொடர்பு : 077 530 4156

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கனகரத்தினம்



தோற்றம் 26 • 04 • 1931 — மறைவு 19 • 01 • 2023

கருகம்பனையை பிறப்பிடமாகவும் பன்னாலை தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகரத்தினம் அவர்கள் 2023.01.19 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான வேலுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான ஆறுப்பிள்ளை சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் காலம் சென்ற பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் காலம் சென்றவர்களான குணரத்தினம், வைரவப்பிள்ளை, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் சோமசுந்தரம் அமரர் தெய்வானைப்பிள்ளை, அமரர் சிவபாக்கியம் மற்றும் இராஜலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கலாவதி, ரவீந்திரன், கருணாவதி (ஆசிரியர் யா/வறுத்தலைவிளான் அ. மி. த. க பாடசாலை), சசிகரன், பகிதரன், வசிகரன் (கட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சத்தியலிங்கம், வாசுகி, தேவதாசன், செல்வராணி, கமலாம்பிகை (ஆசிரியர் யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), கலைஷாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அனீஷா, கஸ்தூரி, பகீரதி, யதுசிகா, ருஜாந்தன், ருயாந்தி, சயந்தினி, கிஷாலினி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (20.01.2023) இன்று வெள்ளிக்கிழமை மதியம் 12:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (14330)

நெருஞ்சியோலை, பன்னாலை, தெல்லிப்பழை. 077 817 7851, 077 581 3280, 077 654 5142 -குடும்பத்தினர்.

### வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம் 454, காரைநகர் வீதி, வட்டாரம் - 01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01. காரைநகர் வீதியிலுள்ள இல: 454 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை அம்பலம் கதிரமலையும், பெண் தங்கமணியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11155 / 24.10.1976ஆம் இலக்க உறுதியால் சிவசம்பு சரவணமுத்துவும் சிவசம்பு இராமநாதனும், சிவசம்பு சண்முகராசாவும், பொன்னம்பலம் கனகசபையும் பெண் அன்னபூரணமும், சபாரத்தினம் கைம்பெண் சிவபாக்கியமும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

குறித்த அம்பலம் கதிரமலை பெண் தங்கமணி ஆகியவர் காலஞ்செல்ல குறித்த தங்கமணி ஆகியவரின் கணவரான குறித்த அம்பலம் கதிரமலை ஆகியவருக்கு தேடிய தேட்டப்பங்காகவும், அவருடைய பிள்ளைகளான பொன்னையா மகேந்திரன் கைம்பெண் மனோரஞ்சிதமும் கதிரமலை மோகனேஸ்வரனும் கதிரமலை டோகேஸ்வரனும், கதிரமலை சர்வேஸ்வரனும் கோபாலப்பிள்ளை தேவிகரன் பெண் பிறேமரஞ்சிதமும் ஆகியோருக்கு மாதாவழி முதுசமாகவும் குறித்த ஆதனம் வந்தடைந்தது.

அரியகுட்டி வீரசிங்கம் ஆகியவர் குறித்த முழு ஆதனத்தில் சொரியலான 19/20 பங்கினை பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 635 / 11.08.2018ஆம் இலக்க உறுதியால் குறித்த அம்பலம் கதிரமலையும், பொன்னையா மகேந்திரன் கைம்பெண் மனோரஞ்சிதமும் கதிரமலை மோகனேஸ்வரனும் கதிரா டோகேஸ்வரனும் கதிரமலை சர்வேஸ்வரனும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த அரியகுட்டி வீரசிங்கம் ஆகியவர் குறித்த ஆதனத்தில். மிகுதி சொரியலான 120 பங்கினை பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1939/ 27.04.2022 ஆம் இலக்க உறுதியால் குறித்த கோபாலப்பிள்ளை தேவிகரனும் பெண் பிறேமரஞ்சிதமும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த அரியகுட்டி வீரசிங்கம் ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அரியகுட்டி வீரசிங்கம் ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும். வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை**

(14324)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகளின் கைப்பொம்மையாக கனடா இருக்கிறது- வீரசேகர வியாக்கியானம்

(கொழும்பு)

**பிரிவினை வாதிகளை சந்தோஷப்படுத்துவதற்காகவே முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் மீது பொருளாதாரத் தடையை கனடா விதித்துள்ளது என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

சுனில் ரத்னாயக்கவுக்குக் கிடைக்கப்பெற்ற பொது மன்னிப்பை எதிர்க்கும் கனடா முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை பொது மன்னிப்பில் விடுவிக்கும்போது மாத்திரம் ஏன் எதிர்ப்பதில்லை என அவர் கேள்வியெ முப்பினார்.

இலங்கையில் நடை பெற்றது சிவில் யுத்த மென கனடா கூற்றை நிராகரித்த அவர், சர்வதேச ரீதியில் தடைச் செய்யப்பட்ட பயங்கர வாதிகளின் கைப்பொம்மையாகக் கனடா இருப்பதாக வரலாற்றில் பதியப்படும் எனவும் தெரிவித்தார். (நி)



# வேலன் சுவாமிகள் கைது பிரிட்டன் எம்.பி கண்டனம்

(லண்டன்)

யாழ்ப்பாணத்தில் இந்து சமய தலைவர் வேலன் சுவாமிகள் கைது செய்யப்பட்டதற்கு பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் சியோபைன் மைக்டொனாக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளதாவது.

2022 இல் இலங்கையில் ஜனாதிபதி மாற்றப்பட்டதன் மூலம் நாட்டின் மனித உரிமைகள் பதிவில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்ற மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சமீபத்திய மதிப்பீட்டை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

ஜனாதிபதி ரணிலின் யாழ்ப்பாண விஜயத்தின் போது அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக சிவில் உரிமை செயற்பாட்டாளரும் இந்து சமய தலைவருமான வேலன் சுவாமிகள் இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதை நான் கண்டிக்கிறேன்.

அமைதியான முறையில் போராட்டம் நடத்துவது மனிதனின் அடிப்படை உரிமை என அவர் பதிவிட்டுள்ளார். (நி)

# பவித்ரா, ஜீவன் அமைச்சர்களாக நியமனம்

(கொழும்பு)

பவித்ரா வன்னியாராச்சி, ஜீவன் தொண்டமான் ஆகிய இருவரும் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று அமைச்சர்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

அதன்படி, பவித்ரா வன்னியாராச்சி வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சராகவும் ஜீவன் தொண்டமான் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். (நி)

# ஜனாதிபதி மட்டில் எச்சரிக்கையாயிருங்கள் தமிழ் கட்சிகளுக்கு பொன்சேகா அறிவுறுத்தல்

(கொழும்பு)

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் கதைத்து அரசியல் இலாபம் தேடிக் கொள்ள ஜனாதிபதி முயற்சிப்பதால் இதுதொடர்பில் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் விழிப்புடன் இருக்குமாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற புனர்வாழ்வு அலுவலக சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

13ஆம் திருத்தம் ஊடாக அனைத்தையும் பெற்றுக் கொள்வதற்கு பொருளாதாரத்தில் முதலில் அபிவிருத்தி ஏற்பட வேண்டும் எனவும் அவ்வாறு இல்லாமல் அதனை நிறைவேற்றினால் நாட்டில் இனவாதம், பிரிவினைவாதம் ஏற்பட்டு மக்களிடையே குழப்பமே ஏற்படும் எனவும் தெரிவித்தார். (நி)




ஓம்சக்தி

"வீரமாகாளி திருத்தாள் போற்றி"

"வீரமாகாளியை சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம்"

## அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

### தேர், தீர்த்த உற்சவ விஞ்ஞாபனம்

**நல்லூர் வீரமாகாளி அம்பாளின் அலங்கார உற்சவ தேர்த்திருவிழா 20/01/2023 ஆம் திகதியான இன்றும் தீர்த்த திருவிழாவும் மின்னெறிந்தான் உற்சவமும் 21/01/2023 ஆம் திகதியான நாளைய தினமும் சிறப்பாக நடைபெறவுள்ளது.**

**உற்சவ விபரம்**

**தேர் உற்சவம் 20.01.2023 - இன்று வெள்ளிக்கிழமை**

கும்பபூஜை காலை 5.00 மணி

மூலஸ்தான பூஜை காலை 6.30 மணி

வசந்த மண்டப பூஜை காலை 7.00 மணிக்கு நடை பெற்று அம்பாள் வீதி வலம் வந்து காலை 8.30 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணமாகி தேரில் பவனி வருவார் 10.30 மணியளவில் பச்சை சாத்தி தேரில் இருந்த அவரோகணமாகி இருப்பிடமடைவார்.

**தீர்த்த உற்சவம் 21.01.2023 - நாளை சனிக்கிழமை**

கும்ப பூஜை:- காலை 6.00 மணி

மூலஸ்தான பூஜை:- காலை 7.00 மணி

வசந்த மண்டப பூஜை- காலை 7.30 மணி தொடர்ந்து காலை 9.00 மணிக்கு தீர்த்தவாரியும் அம்பாள் உள்வீதி, வெளிவீதி வலம் வருதலும் இடம் பெற்று யாக கும்ப அபிஷேகமும் நடைபெறும்.

**மாலை அபிராமிபட்டர் உற்சவம்**

கும்ப பூஜை மாலை 3.00 மணி

மூலஸ்தான பூஜை மாலை 3.30 மணி

அபிராமி அந்தாதி ஓதுதல் மாலை 4.00 மணி. இடம் பெற்று தொடர்ந்து மின்னெறிந்தான் உற்சவம் நடைபெறும்.

(சி-5815)

**விஷேட அறிவிப்பு:**

**ஆலயத்தில் சுவாமி தூக்குவதற்கு எவ்வித கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை என்றும் வாகனத்துடன் மட்டும் அனைவரும் சுவாமி காவி கொள்ள முடியும் என்பதை பகிரங்கமாக அறியத்தருகின்றேன். ஒரு சிலரால் சமூக முரண்பாட்டை தோற்றுவிக்கும் பொருட்டு பொய் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது என்பதையும் அம்பாள் அடியவர்களுக்கு வெளிப்படையாக தெரிவித்துக் கொள்கின்றேன்.**

**தெளிவே என்சிந்தனை.**

இங்ஙனம்

இராஜ ஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்கள்

முதன்மை பிரதம குருவும் - ஆதீனகர்த்தாவும்

மேற்படி தேவஸ்தானம்.


# 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடையாது

## தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம்


(கொழும்பு)

நாட்டில் 13 ஆவது அரசியலமைப்பை நடைமுறைப்படுத்தினால் பிரிவினைவாத அரசியல்வாதிகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் நோக்கம் நிறைவேறுமே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது என்றும் 13 ஐ அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது என்றும் தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் அமைப்பாளர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்காக வடக்கு மக்களுக்கு வாக்குறுதியை வழங்கி இருக்கிறார்.

மேலும் வடக்கு-கிழக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்று தருவதாகவும் கூறி வருகிறார். இதனை கூறுவதற்கு ஜனாதிபதிக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது. அதனை நிறைவேற்ற வேண்டுமாயின் அவருக்கு மக்களாணை வேண்டும்.



இந்தியாவின் வேண்டுகோளுக்கு இணங்கவே 13 ஐ நடைமுறைப்படுத்த ரணில் ஆர்வம் காட்டுகிறார். அவர்கள் இலங்கை மீது முழுமையாக அதிகாரத்தை பயன்படுத்தி 13 ஐ நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

மேலும் அமெரிக்காவிற்கும் அதில் ஒரு பங்கு இருக்கிறது. அன்று 13 ஐ நடைமுறைப்படுத்த ஜே.ஆர். ஜயவர்தன கைச்சாத்திட்ட போது அமெரிக்கா உயர்ஸ்தானிகரே முதலில் வாழ்த்து செய்தி அனுப்பினார். எம்மை பொறுத்த மட்டில் இந்தியா மற்றும் அமெரிக்காவே இதன் பின்னணியில் இருக்கிறது.

நாட்டில் 13 ஆவது அரசியலமைப்பை நடைமுறைப்படுத்தினால் பிரிவினைவாத அரசியல்வாதிகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் நோக்கம் நிறைவேறுமே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க போவதில்லை என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிடம் போராடி தோற்றது நியூஸிலாந்து



நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஹைதராபாத் மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 349 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சுப்மான் கில் 208 ஓட்டங்களையும் ரோஹித் சர்மா 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், சிப்லே மற்றும் டேரில் மிட்செல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் லொக்கி பெர்குசன், டிக்னர் மற்றும் சான்ட்னர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 350 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணியால், 49.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 337 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், இந்தியக் கிரிக்கெட் அணி 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மைக்கேல் பிரேஸ்வெல் 140 ஓட்டங்களையும் மிட்செல் சான்ட்னர் 57 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மொஹமட் சிராஜ் 4 விக்கெட்டுகளையும் குல்தீப் யாதவ் மற்றும் சர்துல் தாகூர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மொஹமட் ஷமி மற்றும் ஹர்திக் பாண்ட்யா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 149 பந்துகளில் 9 சிக்ஸர்கள் 19 பவுண்ரிகள் அடங்கலாக, 208 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட சுப்மான் கில் தெரிவு செய்யப்பட்டார். (4)

# ஒருநாள் கிரிக்கெட்டில் இந்தியா வரலாற்றுச் சாதனை




ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அதிக இரட்டை சதம் அடித்த அணி என்ற புதிய வரலாற்றுச் சாதனையை இந்தியா படைத்துள்ளது.

நேற்று முன்தினம் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில், இந்திய அணியின் தொடக்க வீரர் சுப்மன் கில் இரட்டை சதம் விளாசினார். அவர் 149 பந்துகளில் 9 சிக்ஸர், 19 பவுண்டரிகளுடன் 208 ஓட்டங்கள் குவித்தார்.

ஒருநாள் போட்டிகளில் இரட்டை சதம் விளாசிய ஐந்தாவது வீரர் சுப்மன் கில் ஆவார்.

அதேபோல் இந்திய அணியும் புதிய வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. அதாவது, இந்திய அணி தரப்பில் ஒருநாள் போட்டிகளில் 7 இரட்டை சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன.

மேலும், அதிகபட்ச தனிநபர் ஸ்கோர் அடித்தவரும் இந்திய வீரர் தான். இந்திய அணியின் கப்டன் ரோகித் சர்மா 265 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இரட்டை சதம் அடித்த சச்சின் டெண்டுல்கர்(200), சேவாக் (219), இஷான் கிஷன் (210), ரோகித் சர்மா (209) (208) (265) ஆகியோர் வரிசையில் கில் இணைந்தார்.

இந்திய வீரர்கள் தவிர நியூசிலாந்தின் மார்ட்டின் கப்தில் (237), மேற்கிந்திய தீவுகளின் கிறிஸ் கெய்ல் (215), ஃபஹர் ஜமான் (210) ஆகியோர் மட்டுமே இரட்டை சதம் அடித்துள்ளனர். (4)

# தை மாத இராசி பலன்கள் 15.01.2023-12.02.2023

## துலாம்

**பொறுமையும் சகிப்புத் தன்மையும் கொண்டு செயற்படும் துலாம் இராசி வாசகர்களே!**

தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், சனியோடு சேர்ந்து சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டமத்தில் செவ்வாய் இருக்கிறார். ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தாலும் மற்ற கிரகங்களின் சஞ்சாரத்தாலும் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், சுக ஸ்தானத்தில் சனியோடும், லாபாதிபதி சூரியனோடும் இணைந்து சஞ்சரிக்கிறார். விரயாதிபதி புதன் சகாய ஸ்தானத்தில் இருக்கிறார். எனவே குடும்பச்சுமை கூடும். விரயங்கள் அதிகரிக்கும்.

எதையும் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு என்பதால் வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படாமல் பார்த்துக் கொள்வீர்கள். 8 இல் செவ்வாய் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அடிக்கடி வந்து அலைமோதும். 6 இல் குரு இருப்பதால் மறைமுக எதிர்ப்புகள் உண்டு. ஜென்மத்தில் கேதுவும் 7 இல் ராகுவும் இருப்பதால் சர்ப்ப தோஷ அமைப்பு இருக்கிறது. எனவே ஏற்றமும் இறக்கமும் கலந்த நிலை உருவாகும். எதிலும் இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா என்ற இரட்டித்த சிந்தனை உருவாகும். சர்ப்ப கிரகங்களுக்குரிய ஆலயங்களுக்கு அனுகூலம் தரும் நாட்களில் சென்று முறையான வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. அது மட்டுமல்லாமல் வாழ்க்கைத் துணை வழியே அனுசரித்துச் செல்வதன் மூலம் குடும்பத்தில் அமைதி நிலவ வழிபிறக்கும்.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. லாப ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சூரியன். ஆதிபத்யங்கள் நல்ல இடமாக இருந்தாலும் கிரகங்கள் ஒன்றுக்கொன்று பகைக் கிரகங்களாக இருப்பதால் அவற்றின் சேர்க்கைக் காலங்களில் சில தடுமாற்றங்களும் தடைகளும் வரத்தான் செய்யும். தாய் - தந்தை உடல்நலத்தில் கவனம் தேவை. எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. பணிபுரியும் இடத்தில் சக பணியாளர்களால் பிரச்சினைகள் ஏற்படும். உயர்மட்ட அதிகாரிகள் உங்களுக்கு கூடுதல் பொறுப்புகளைக் கொடுத்து மனக்கலக்கத்தை ஏற்படுத்துவர். பணப்பொறுப்புகளில் இருப்பவர்கள் மிகவும் கவனத்துடன் செயற்படுவது நல்லது. திறமைக்குரிய அங்கீகாரம் கொடுக்க மாட்டார்கள். புதிய இடத்திற்கு வேலைக்குச் செல்ல முயற்சித்தாலும் அதில் தாமதம் ஏற்படும்.

**கும்ப - சுக்கிரன் சஞ்சாரம்**

தை 9 ஆம் திகதி, கும்ப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன், பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது ஒரு சில தடைப்பட்ட காரியங்கள் துரிதமாக நடைபெறும். அண்ணன் -தம்பிகளுக்குள் இருந்த பிரச்சினைகள் மாறும். கண்ணியம் மிக்க நண்பர்கள் மூலம் கடமையில் ஏற்பட்ட தொல்லையை அகற்றிக் கொள்வீர்கள். புண்ணிய காரியங்கள் செய்வதில் மனம் செல்லும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடிய வழிபிறக்கும். பொருளாதார நெருக்கடி ஓரளவு அகலும்.

**மகர - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தை 21 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். சுக ஸ்தானத்தில் புதன் சஞ்சரிப்பது யோகம் தான். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் அல்லது சொத்துக்கள் வாங்க வேண்டுமென்ற எண்ணம் உருவாகும். அதை செயற்படுத்தியும் வெற்றி காண்பீர்கள். சுபச்செலவுகள் அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் கல்யாண முயற்சி, பெற்றோரின் மணி விழாக்கள் நடைபெற வழிபிறக்கும் நேரம் இது. இம் மாதம் வெள்ளிக்கிழமை தோறும் லட்சுமி வழிபாட்டை மேற்கொண்டால், இனிய பலன் கிடைக்கும்.

## விருச்சிகம்

**சொல்லும் சொற்களை வெல்லும் சொற்களாக மாற்றும் விருச்சிக இராசி வாசகர்களே!**

தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியையே பார்க்கிறார். இதனால் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தனவரவு கூடும். மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் தொட்ட காரியங்கள் அனைத்தும் வெற்றியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், தன ஸ்தானத்தையும் தொழில் ஸ்தானத்தையும் பார்ப்பதால் தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். இல்லம் வாங்குவது அல்லது இல்லம் கட்டிக் குடியேறுவது போன்றவற்றை செயற்படுத்தும் நேரம் இது. சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும்.

தன ஸ்தானத்தில் புதன் சஞ்சரிக்கிறார். எனவே தொழில் வளர்ச்சியில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். வாகனம் வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு. 3 ஆம் இடத்தில் சூரியன், சனி, சுக்கிரன் இணைந்துள்ளனர். பஞ்சம ஸ்தானத்தில் குரு பலம் பெற்றிருக்கிறார். குருவின் பார்வை உங்கள் இராசியில் மட்டுமல்லாமல் 9, 11 ஆகிய இடங்களிலும் பதிவதால் பெற்றோர் வழியில் ஆதரவு கிடைக்கும். உற்றார், உறவினர் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். கற்ற கல்விக் கேற்ற வேலை கிடைக்கும். ராகு-கேதுக்களின் ஆதிக்கத்தால் புதிய திட்டங்களைத் தீட்டி அதில் வெற்றி பெறுவீர்கள். ஆடம்பரப் பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும்.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சூரியன். சகாய ஸ்தானாதிபதியானவர் சனி பகவான். பகைக் கிரகங்களான இருவரும் ஒரே இடத்தில் இருந்தாலும், நல்ல இடத்து ஆதிபத்யங்கள் ஒன்று கூடுவதாலும், அதோடு சப்தமாதிபதி சுக்கிரன் இருவரோடும் இணைந்திருப்பதாலும் எதிர்பார்ப்புகள் ஓரளவு பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். சகோதர வழியில் சிறுசிறு சச்சரவுகள் ஏற்படும். பணிபுரியும் இடத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லுங்கள். தற்காலிகப் பணியில் உள்ளவர்களுக்கு நிரந்தரப் பணி கிடைக்கும். சகாய ஸ்தானாதிபதியாகவும் சனி பகவான் இருப்பதால், காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும்.

**கும்ப - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தை 9 ஆம் திகதி கும்ப இராசிக்கு செல்கிறார். 4 ஆம் இடமான சகாய ஸ்தானத்திற்கு வரும் சுக்கிரனால், நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். தொழில் வளர்ச்சிக்காக புதிய முதலீடுகள் செய்வீர்கள். தாய் வழி ஆதரவு உண்டு. வீடு, மனை வாங்கும் அமைப்பு உருவாகலாம். பணிபுரியுமிடத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை வந்துசேரும். அரச வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு அது கைகூடலாம். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

**மகர - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தை 21 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். சகாய ஸ்தானத்திற்கு புதன் வரும் பொழுது, இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரலாம். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். எதிர்கால நலன் கருதி நீங்கள் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு உண்டு. பணிபுரியுமிடத்தில் உங்களது மேலதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். கூடுதல் பொறுப்புகளும் கூடுதல் சம்பளமும் கிடைக்க வழிபிறக்கும். இம் மாதம் ஞாயிறு தோறும் சூரியனை வழிபடுவதன் மூலம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்புளுவன்சா வைரஸ் தாக்கம் மேலும் அதிகரிக்கக் கூடும்

## மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)

**இன்புளுவன்சா ஏ வைரஸ் இலங்கையில் பரவலாகப் பரவி வருவதாகவும் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இந்த வைரஸின் பரவல் அதிகரிக்கக் கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் விசேட மருத்துவ நிபுணர் ஜூட் ஜயமஹா இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.


பத்தொன்பது மருத்துவமனைகளின் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்த நோயாளிகள் மற்றும் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறும் நோயாளிகளிடம் இருந்து பெறப்பட்ட சளி பரிசோதனையில் இது உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மாதாந்தம் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்களில் ஐந்து வீதத்திலிருந்து பத்து வீதத்திற்கு இடைப்பட்டவர்கள் இன்புளுவன்சா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருமல், சளி, மூச்சு விடுவதில் சிரமம் உள்ளவர்கள் இது குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என்றும் இந்த நிலைமைகள் மோசமடைந்தால், மருத்துவ சிகிச்சை பெறுவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இலங்கை வந்தடைந்தார்

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்



(கொழும்பு)

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

இவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி மற்றும் தமிழ்த் தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாட உள்ளார்.

அத்துடன் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவையும் சந்தித்து கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# உயர்தரப் பரீட்சையின் போது இரத்திரனியல் சாதனங்கள் வைத்திருக்கத் தடை

## பரீட்சைத் திணைக்கள ஆணையாளர்

(கொழும்பு).

உயர்தர பரீட்சையின் போது எந்தவொரு இலத்திரனியல் சாதனங்களை கொண்டு செல்வதோ அல்லது வைத்திருக்கவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விதிகளை மீறினால் ஐந்தாண்டு காலத்திற்கு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தடை விதிக்கப்படும் என பரீட்சை திணைக்கள ஆணையாளர் நாயகம் எச்.ஜே. எம்.சி. அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சை சட்டத்தின் படி, கைத்தொலைபேசிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய புளூடூத் சாதனங்கள் போன்ற இலத்திரனியல் சாதனங்களை கொண்டு வர பரீட்சார்த்திகளுக்கு அனுமதி இல்லை என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ஊட்டச்சத்து குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

## சுகாதார அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பல்வேறு வகையான ஊட்டச்சத்துக் குறைபாடுகளுடன் போராடும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அரசாங்க அறிக்கை மற்றும் சுகாதார அமைச்சின் தரவு சுட்டிக் காட்டியுள்ளது.

22 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கை, பொருளாதார நெருக்கடியின் காரணமாக, உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்துடனும் போராடி வருவதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபரில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, நாட்டின் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 43.4 சதவீதத்துக்கும் அதிகமானோர் ஊட்டச்சத்து குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

42.9 சதவீதமானோர் ஏதாவது ஒரு வகையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிப்படைந்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டில் வளர்ச்சி குன்றிய, நிறை குறைந்த ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் சதவீதம் அதிகரித்துள்ளன.

ஐந்து வயதுக்குட்பட்ட சுமார் 1.4 மில்லியன் குழந்தைகள் நாட்டின் குடும்பநல சுகாதார அமைப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

2021 இல் 12.2 சதவீதமாக இருந்த எடை குறைந்த குழந்தைகளின் வீதம் 2022 இல் 15.3 வீதமாக உயர்ந்துள்ளது.


வளர்ச்சிக்குன்றிய குழந்தைகளின் வீதம் 2021 இல் 9.2 ஆக இருந்த நிலையில் 2022 இல் அது, 10.1 வீதமாக உயர்ந்திருந்தது

நாட்டின் இந்த தீவிரப் போக்கு நகர்ப்புறம், கிராமம் மற்றும் பெருந்தோட்டத் துறையில் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன. (நி)


# இராசிபலன்

20.01.2023
தை 06, வெள்ளிக்கிழமை
திரயோதசி முற்பகல் 7.59 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 5.45 மணிவரை
மூலம் முற்பகல் 11.08 மணிவரை
சுபநேரம் -6.35-8.05 மணிவரை
இராகு காலம் -11.05-12.35 மணிவரை
அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம்
ரோகிணி, மிருகசீரிடம்.


**வளவன்**





இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், செய்தொழில் மேன்மையுண்டு.




சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.





வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.




உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.




உறவினர்கள் சந்திப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தன வரவுகள் திருப்தி கரமாக அமையும், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.




தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள்.




உற்றார் உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும் நாள்.




பேச்சில் கனிவு பிறக்கும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.




மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும் தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**உலகத்தையோ மற்றவர்களையோ திருத்துவதற்கு உன்னால் முடியாது உன்னையே நீ திருத்து.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தக் கோரி

# வடக்கு - கிழக்கில் இன்று போராட்டம்

(சாவகச்சேரி)

**இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்துள்ள நிலையில் அதிகாரப் பகிர்வினை உறுதிப்படுத்த இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனும் தொனிப்பொருளில் வடக்கு -கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களிலும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற இருப்பதாக வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.**

"இந்தியா மற்றும் ஐ.நா மனித உரிமை பேரவையின் மையக் குழு நாடுகளே! ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வினை உறுதிப்படுத்த இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குக" எனும் மையப்பொருளில் இடம்பெறவுள்ள கவனயீர்ப்புப் போர்ாட்டத்திற்கு ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள்,பொதுமக்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஆதரவு வழங்க வேண்டுமென வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கேட்டுக் கொண்டுள்ளது. (4-6-30-104)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுக்கழக சங்கத்தின் 2023 ஆம் ஆண்டு பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது. (4)

## பொதுக்கூட்டம்

(கரணவாய்)

யா/புலோலி மெ.மி.த.க பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (4-6-60)

## கல்வியங்காடு வர்த்தக நிலையத்தில் வன்முறைக் கும்பல் அட்டகாசம்

### உரிமையாளர் மீது வாள்வெட்டு

### 5 இலட்சம் ரூபாய் பணமும் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் மீதும் அதன் உரிமையாளர் மீதும் இனம்தெரியாத குழுவினர் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தாக்குதல் நடத்தி, ஐந்து இலட்ச ரூபாய் பணத்தினை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் வர்த்தக நிலையத்தினை மூடுவதற்கு தயாரான நேரத்தில் வாள் மற்றும் கொட்டன்களுடன் 3 மோட்டார் சைக்கிளில் வந்த 7 பேர் கொண்ட குழுவினரே குறித்த தாக்குதலை நடத்தியுள்ளனர்.

தாக்குதலாளிகள் வர்த்தக நிலையம் மீது வெற்று கண்ணாடி போத்தல்களால் தாக்குதல் நடத்தியதுடன் உரிமையாளரினை வாளினால் வெட்டிவிட்டு வர்த்தக நிலையத்தினையும் அடித்து நொறுக்கியுள்ளனர்.

அத்துடன் வர்த்தக நிலையத்திலிருந்த ஐந்து இலட்சம் ரூபாய் பணத்தினையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். வெட்டுக் காயங்களுக்கு உள்ளான வர்த்தக நிலைய உரிமையாளர் யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார்,தடயவியல் பொலிஸார் மற்றும் கோப்பாய் பொலிஸார் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் சி.சி.டி.வி காணொளிகளின் அடிப்படையில் குறித்த குழுவினரை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-33)



யாழ்.நாவாந்துறை கலைவாணி முன்பள்ளியில் நேற்று வியாழக்கிழமை காலை பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சத்திய சாயி பாபா அமைப்பில் வடபிராந்திய ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் சாய் சகோதரர் ஸ்ரீ வேதநாராயணன் கொல்லாங்கோடேவின் சிறப்புச் சொற்பொழிவு நாளை சனிக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (4)

## வீரசிங்கம் மத்திய கல்லூரியின் விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிநாளை 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி. ல. முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)

## ஒன்றரை இலட்சம் பெறுமதியான பசு மாடு மிருசுவிலில் திருட்டு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் பகுதியில் வாழ்வாதாரத்திற்காக வளர்க்கப்படும் மாடுகள் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் திருட்டுப் போவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில் மிருசுவில்-மருதங்குளம் பகுதியில் வீட்டு வளவிற்குள் கட்டப்பட்டிருந்த 5 மாடுகளை கடத்தும் முயற்சியில் வடி ரக வாகனத்தில் வந்தவர்கள் ஈடுபட்டிருந்த போது ஊரவர்கள் விழித்துக் கொண்டதில், ஒன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதி யான பசு மாடு ஒன்றை மாத்திரம் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு ஏனைய மாடுகளை கைவிட்டு விட்டு தப்பித்துச் சென்றிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்யப்பட்டுள்ளது. அதேசமயம் கடந்த வாரம் மிருசுவில் பகுதியில் இருந்து திருடிச் செல்லப்பட்ட பசு மாடு ஒன்று வடமராட்சிப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-32)

## கலை விழா

(குருநகர்)

குருநகர் புனித யோசவ்வாஸ் இளையோர் மன்ற 30 ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தும் கலை விழா நாளை சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு குருநகர் கலையரங்கில் நடைபெறும். (4-6-106)

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா - 2023 இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு முன்பள்ளி கலை அரங்கில் சரஸ்வதி முன்பள்ளித் தலைவர் தி. பன்னீர்ச் செல்வம் (JP) தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் விருந்தினராக கலந்து கொளளவுள்ளார். (4-6)

## சங்கிலி அறுத்தவர் பொலிஸாரிடம் சிக்கினார்

### பயன்படுத்திய மோ.சைக்கிளும் மீட்பு



(கரணவாய்)

நெல்லியடி பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையால் வீதியால் சென்ற பெண்ணிடம் அபகரிக்கப்பட்ட நகை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் குறித்த களவுடன் தொடர்புடைய ஒருவரையும் தேடி வருகின்றனர்.

கடந்த 13 ஆம் திகதி குஞ்சர் கடைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணிடம் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சங்கிலியை அபகரித்து சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் சாவகச்சேரி புலனாய்வுப் பிரிவினரால் கொடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீரவின் பணிப்பின் பேரில் உபபொலிஸ் பரிசோதகர் ரட்ணாயக்க தலைமையிலான குழுவினர் அதிரடி நடவடிக்கைய மேற்கொண்டு ஒரு கிழமைக்குள் சந்தேகநபரையும் குறித்த களவில் ஈடுபட்ட மோட்டார் சைக்கிளையும் புலனாய்வுத்துறையின் உதவியுடன் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில், நகை அடகு வைக்கப்பட்டமையும் தெரியவந்துள்ளது. (4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி கொடுப்பனவுடன் வழங்கப்படும்

# ஏனைய சலுகைகள் நீக்கப்படும்

## அமைச்சர் மனுஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**சமுர்த்தி கொடுப்பனவுடன் வழங்கப்படும் ஏனைய சலுகைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனைக் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், சமுர்த்தி மானியம் தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இல்லாதவர்கள், கஷ்டப்படுபவர்களை கவனிக்க வேண்டும், அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும், அவர்களை பலப்படுத்த வேண்டும், அவர்கள் சுயமாக எழுச்சி பெறும் நிலைக்கு கொண்டு வர வேண்டும் எனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இன்றி அரசியல் பொறிமுறையாக சமுர்த்தியை வைத்துக் கொள்ள அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# தேர்தல் அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பு

## தேர்தலை ஒத்திவைக்கும் திட்டமா? எனக் கேள்வி

(கொழும்பு)

தேர்தல் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இருவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அந்த அதிகாரிகளில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் குறித்த அதிகாரிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி அவர்கள் சுயாதீனமான முறையில் செயற்பட இடமளிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, இவ்வாறான சம்பவம் தொடர்பில் தனக்கும் தகவல் கிடைத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்தி வைக்க அரசாங்கம் மறைமுக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் இந்த குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமளித்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (நி)

# சோளம் பயிரிடுவோருக்கு 120,000 ரூபாய் உதவித்தொகை

(கொழும்பு)

சிறுபோக விவசாய பங்கேற்பு வேலைத் திட்டத்தினூடாக சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 120,000 ரூபாய் உதவித்தொகையாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான பருவத்தில் 30,000 ஹெக்டேயர் சோளத்தை பயிரிடுவதற்கு ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த பருவத்தில், 68,000 ஹெக்டேயர் சோளம் பயிரிடப்பட்டுள்ள நிலையில் அதன்மூலம் 280,000 மெற்றிக் தொன் அறுவடை எதிர்பார்க்கப்படுகிறது. (நி)


# மணிவிழா வாழ்த்து




உயர்திரு

## வல்லிபுரம் விக்னேஸ்வரன் (SLTS-I)

சேவை விபரங்கள்

| | |
|---|---|
| 20.10.1994 | - தி/சேனையூர் மத்திய கல்லூரி |
| 01.01.1997 | - யா/ வல்வை மகளிர் மகா வித்தியாலயம் |
| 21.09.2012 | - யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| 12.06.2013 | - யா/ ஞானசாரியார் கல்லூரி |
| 03.09.2020<br>20.01.2023 | - யா/தேவரையாளி இந்துக் கல்லூரி |

இன்று மணிவிழாக் காணுகின்ற
எங்கள் கல்லூரியின் ஆசானை
வாழ்த்துவதோடு அவரது ஓய்வுக்காலம்
சீரும் சிறப்புமாக அமைய
இறைவனை வேண்டுகின்றோம்.

(C-5814)

பணியாளர் நலன்புரிச் சங்கம்
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி.

# சேவை நலன் பாராட்டு



திருமதி. தேவமனோகரி உருத்திரசிங்கம் (SLTS-I)

இசைக்கலைமணி, சங்கீத வித்தகர்,
சங்கீத பாட ஆசிரியர்,
பகுதித்தலைவர் (உயர்தரம்)
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.

சேவை விபரம்

முு/புதுக்குடியிருப்பு றோ.க.வி
1985.12.29–1986.06.30
மு/புதுக்குடியிருப்பு ம.வி
1986.07.01–1987.02.14
மு/புதுக்குடியிருப்பு றோ.க.வி
1987.02.15–1990.01.31
மு/விஸ்வமடு ம.ம.வி
1990.02.01–1992.05.31
யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி
1992.06.01–1996.05.12
மு/மல்லாவி ம.ம.வி
1996.05.13–1996.11.14
யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி
1996.11.15–2002.12.31
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி
2003.01.01–2014.01.26
யா/வைத்தீஸ்வராக்கல்லூரி
2014.01.27–2023.01.25

Best Wishes

37 வருடங்கள் சேவையாற்றி 25.01.2023 அன்று ஓய்வு பெற்றுச் செல்லும்
எமது கல்லூரி ஆசிரியை திருமதி.தேவமனோகரி உருத்திரசிங்கம்
அவர்களை மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

செல்வி. அருளப்பு பெனிக்னா றூபினி
(SLTS-I)
(மனைப்பொருளியல் ஆசிரியர்)

சேவை விபரம்

யா/தெற்பேலி அ.த.க.வி
01.09.1992–29.05.1996
யா/புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயம்
30.05.1996–26.09.1997
யா/நாரந்தனை கணேச வித்தியாலயம்
27.09.1997–31.12.2015
யா/வைத்தீஸ்வராக்கல்லூரி
04.01.2016–31.12.2022

30 வருடங்கள் சேவையாற்றி 31.12.2022 அன்று
ஓய்வு பெற்றுச் சென்ற எமது கல்லூரி ஆசிரியை
செல்வி.அருளப்பு பெனிக்னா றூபினி
அவர்களை மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.



Best Wishes

(14322)

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிக்கழகம், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 81





துக் கொண்டு அவன் பயத்தினால் மூர்ச்சையடைந்து விழலாம் அல்லவா? அல்லது தப்பித்து ஓடப் பார்க்கலாம் அல்லவா! அச்சமயம் தானும் தப்பி ஓடிவிடலாம்! இவ்விதம் திருமலை எண்ணிய சமயத்தில், அவனுடைய சோதனை முடிவடையும் எனத் தோன்றியது.

ஓர் ஆள் தென் மேற்கிலிருந்து, அதாவது குடந்தைச்சாலை வழியாக வந்து கொண்டிருந்தான். அவனுக்காகத்தான் இடும்பன்காரி இத்தனை நேரமாய்க் காத்திருக்கிறான் என்று திருமலையின் உள்ளுணர்ச்சி கூறியது.

தப்பித்துப் போவது எப்படி! எவ்வளவு ஜாக்கிரதையாக மரத்தின் மறுபக்கத்தில் இறங்கினாலும் ஏதாவது சத்தம் கேளாமல் இராது! கேட்டால் இடும்பன்காரி உடனே பார்த்து விடுவான். அவனோ இடுப்பில் ஒரு கூரிய கொடுவாளைச் செருக்கிக் கொண்டிருந்தான். அதைத் தன் பேரில் அவன் பிரயோகிக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்?

வேறு என்னதான் செய்வது? பேய் பிசாசைப் போல் பயங்கரமாகச் சத்தமிட்டுக் கொண்டு இடும்பனின் மேலேயே குதிக்கலாமா? குதித்தால் தன்னை வேதாளம் என்று நினைத்

புது ஆள் வந்ததைப் பார்த்ததும் அரசமரத்தடியில் உட்கார்ந்திருந்த இடும்பன் எழுந்து நின்றான். வந்தவன், முன்னால் இடும்பன் செய்த சமிக்ஞையைச் செய்தான். அதாவது ஒரு விரித்த புறங்கையின் மேல் இன்னொரு விரித்த கையை வைத்து, இரண்டு கட்டை விரல்களை ஆட்டி, மச்ச சமிக்ஞை பிடித்துக் காட்டினான் அதைப் பார்த்த இடும்பனும் அதே மாதிரி செய்து காட்டினான்.

"உன் பெயர் என்ன?" என்று வந்தவன் கேட்டான்.

"என் பெயர் இடும்பன்காரி உங்கள் பெயர்?"

"சோமன் சாம்பவன்!"

"உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்."

"நானும் உன்னைத் தேடிக் கொண்டுதான் வந்தேன்."

"நாம் எந்தத் திசையில் போக வேண்டும்?"

"மேற்குத் திசையில்தான்!"

"எவ்விடத்துக்கு?"

"பகைவனின் பள்ளிப்படைக்கு!"

"திருப்புறம்பயம் அருகில்"

"இரைந்து பேசாதே! யார் காதிலாவது விழப் போகிறது" என்று சொல்லிச் சோமன் சாம்பவன் நாலா பக்கமும் பார்த்தான்.

"இங்கே ஒருவரும் இல்லை முன்னாலேயே நான் பார்த்து விட்டேன்."

"பக்கத்தில் எங்கும் ஒளிந்திருக்கவும் இடமில்லையே?"

"கிடையவே கிடையாது!"

"அப்படியானால் புறப்படு எனக்கு அவ்வளவு நன்றாக வழி தெரியாது. நீ முன்னால் போ! நான் சற்றுப் பின்னால் வருகிறேன். அடிக்கடி நின்று நான் பின்னால் வருகிறேனா என்று பார்த்துப் போ!"

"ஆகட்டும். வழி நல்ல வழியல்ல; காடும் மேடும் முள்ளும் கல்லுமாயிருக்கும். ஜாக்கிரதையாகப் பார்த்து நடந்து வர வேண்டும்!"

"சரி, சரி, நீ புறப்பட்டுப் போ! காட்டு வழியாயிருந்தாலும் யாராவது எதிர்ப்பட்டால் மறைந்து கொள்ள வேண்டும் தெரிந்ததா?"

"தெரிந்தது. தெரிந்தது!"


இடும்பன்காரி கொள்ளிடக் கரையோடு மேற்குத் திசையை நோக்கிப் போனான். அவனுக்குச் சற்றுப் பின்னால் சோமன் சாம்பவனும் தொடர்ந்து சென்றான்.

இருவரும் கண்ணுக்கு மறையும் வரையில் ஆழ்வார்க்கடியான் மரத்தின் மேலேயே இருந்தான். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்தான்.

ஆஹா! காலம் பொல்லாத காலம்! எதிர்பாராத காரியங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. ஏதோ ஒரு பெரிய மர்மமான காரியத்தைத் தெரிந்து கொள்ளக் கடவுள் அருளால் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இனி நம்முடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது விஷயத்தை அறிவது. கடம்பூர் மாளிகையில் அரைகுறையாகத்தான் தெரிந்து கொள்ள முடிந்தது.

(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### பொல்லாக் குதிரை போனதே நல்லது

(நேற்றைய தொடர்ச்சி)

நேரம் ஆக ஆக, இரு தரப்பாருக்கும் சண்டை அதிகமாக கத்தல் அதிகமாகி விட்டது. அவர்கள் போட்ட கூச்சல் சுற்றியிருந்தவர்கள் காதுகளைச் செவிடாக்கியது. ஆண்களும் பெண்களுமாக, சிறிய வர்களும் பெரியவர்களும் அங்கே கூட்டமாகக் கூடிவிட்டார்கள்.

அந்த ஊர்க்காரர்களில் ஒருவன் அவர்களை அடக்கிச் சமாதானப்படுத்தி, நியாயம் சொல்ல முன்வந்தான். முதலில் அவன் இரு தரப்பாரையும் நோக்கி, "சண்டையை நிறுத்துங்கள். உங்கள் சங்கதிகளை என்னிடம் சொல்லுங்கள். நான் பொதுவாக இருந்து நியாயம் சொல்கிறேன். நான் சொல்கிற தீர்ப்புக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும். இதற்கு நீங்கள் உடன்படுகிறீர்களா? அதைச் சொல்லுங்கள் முதலில்!" என்றான் நியாயம் கூறவந்தவன்.

"ஒரு பட்சமாக இல்லாமல் பச்சாதாபம் பார்க்காமல், நியாயம் சொல்லுங்கள், நிச்சயம் நாங்கள் சம்மதிக்கிறோம்" என்று அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

#### நடுவர் தீர்ப்பு

நியாயம் சொல்ல முன்வந்த அந்த ஊர்க்காரன் முன்பு ஒரு நாள் தனக்கு நேர்ந்த அனுபவம் ஒன்றை முதலில் அவர்களுக்கு விளக்கமாகக் கூறினான்.

ஒரு நாள் அவன் தொலைவிலிருந்த ஓர் ஊருக்குப் பயணப்பட்டுப் போனான். அன்று இரவு வழியிலே ஓர் விடுதியில் தங்கினான். அந்த விடுதியில் தங்குவதற்கு வாடகைக்கு இடம், உண்பதற்கு உணவு முதலியவற்றைப் பணத்திற்குக் கொடுத்து வந்தார்கள்.

அவன் கையிலே உணவைக் கட்டிக் கொண்டு போயிருந்தான். எனவே அவனுக்கு விலைக்கு உணவு தேவைப்படவில்லை. இரவைக் கழிக்க இடம் மட்டும் தேவைப்பட்டது. அதற்கு வாடகைக்கு இடம் பிடித்துக் கொண்டான்.

"உண்பதற்கு ஏதாவது வேண்டுமா?" என்று விடுதிக்காரர்கள் அவனை வினவியபோது, அவன் வேண்டாம் என்று சொல்லி விட்டான். கறி மட்டும் வாங்கிக் கொள்வதற்கும் கூட அவனிடம் காசு இல்லை.

அங்கே தங்கியிருந்த மற்றவர்கள் எல்லாரும் விதம் விதமாக உணவு வகைகளை உண்டு மகிழ்ந்தார்கள் சிலருக்குச் சுடச்சுட மாமிச வகையறாக்கள் உண்ணக் கிடைத்தன. அப்போது ஓர் ஆட்டின் தொடைப் பாகத்தை அறுத்துப் பக்குவப்படுத்த அதன் மேல் நெய்தடவி, தீயில் பொசுக்கிக் கொண்டிருந்தார்கள். அந்த வாசனை அவன் மூக்கைத் துளைத்தது. வாயில் நீரைச் சுரக்க வைத்தது. வாங்கித் தின்ன ஆசை ஆசையாக இருந்தது. காசு தான் இல்லையே!

அந்த வாசனையைப் பிடித்துக் கொண்டே தன் கட்டுச் சாதத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உண்டு முடித்திட வேண்டும் என்று எண்ணினான். ஆனால் பாதி உண்பதற்குள் மாமிசத்தைப் பொசுக்குவது நின்று விட்டதால் வாசம் இல்லாமல் போய் விட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்பு மணம் சமபந்தி உணவு இவைகளால் சாதி மதப்பிளவு அழியாது. மாறாக மனிதனின் மனப் புரட்சிகர மாற்றத்தாலேயே ஒழியும். - *காமராஜர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தமிழ் மக்களை குழப்பும் சமயரீதியான பேதமை

*“செந்தமிழ்நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே எந்தையர் நாடெனும் பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே...”* என்றான் பாரதி.

பாரதியாரின் இப்பாடல் தமிழ்நாட்டுக்குரியதன்று. மாறாக தமிழ் மக்களுக்குரியது.

தமிழ் என்ற எங்கள் தாய்மொழியே எங்களின் மூச்சு.

எம் தமிழ் இனம் தன் தாய்மொழியாம் தமிழால் ஒன்றுபட்டிருந்தது.

சமயங்கள் வேறுபட்டிருந்தாலும் அது பற்றி இம்மியும் பொருட்படுத்தவில்லை.

எல்லாச் சமயங்களையும் ஏற்றுக்கொள்கின்ற பக்குவம் எங்களிடம் இருந்தது.

தந்தை செல்வநாயகம் தென்னிந்தியத் திருச்சபை சார்ந்தவராக இருந்தபோதிலும் அவரைத் தமிழ் மக்கள் தலைவராக ஏற்றுக் கொண்டனர்.

உண்மையைச் சொல்வதாயின் தந்தை செல்வநாயகத்தை தூக்கிப் போற்றியவர்கள் இந்துக்கள்.

அப்போதெல்லாம் சமயம் பொருட்டாக இருக்கவில்லை. சைவ ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களில் கத்தோலிக்க மக்களும் தேவாலயங்களில் இடம்பெறும் வழிபாடுகளில் சைவமக்களும் பங்கேற்று மகிழ்ந்தனர்.

ஆனால் சமகால நிலைமையைப் பார்க்கும்போது, தமிழ்மொழியால் ஒன்றுபட்ட தமிழினத்தைப் பிரித்தாளுகின்ற வேலைத்திட்டங்கள் முனைப்புடன் நடப்பதை அவதானிக்க முடிகிறது.

இதைப் பார்க்கும்போது அந்தோ நிலைமை எங்கே போய் முடியுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சுருக்கமாகக் கூறுவதாயின், கிரந்தம் முற்றிப் பௌந்திரம் ஆவதுபோல நிலைமை மோசமடைகிறது.

இவ்வாறான நிலைமைக்குக் காரணம் தமிழர் தாயகத்தில் குறிப்பிட்ட மாவட்டங்களை குறிப்பிட்ட சமயங்கள் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க நினைப்பது என்பது புரிதற்குரியது.

இதை வெளிப்படையாகக் கூறுவதாயின், தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைத்து சமய ரீதியாகப் பிரித்தாளுவதில் மன்னார் மாவட்டம் முன்னிலையில் இருப்பதை கூறித்தானாக வேண்டும்.

இதை நாம் கூறும்போது எம் மீது பலரும் ஆத்திரம் கொள்வர்.

ஆனால் அதுபற்றி நாம் கவனத்தில் எடுத்தால் எங்கள் இனத்தின் ஒற்றுமை சிதறடிக்கப்படும் என்பதுதான் உண்மை.

இந்த உண்மையை ஆரம்பத்திலேயே கூறியாக வேண்டும்.

இவ்வாறு கூறுவதன் நோக்கமெல்லாம் சமயப் பாகுபாடல்ல. மாறாக தகுதியும் தரமும் சேவை மூப்பும் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் உரிய பதவிகளில் இருத்தப்பட வேண்டும்.

அவ்வாறு பதவியில் இருப்பவர்கள் சமய பேதங்களை ஒருபோதும் ஏற்படுத்த மாட்டோம் எனச் சத்தியம் செய்து தங்களின் சேவையை ஆற்ற வேண்டும்.

பொதுவில் சில அரச அமைப்புகளில் உயர் பதவிகளில் இருப்பவர்கள் சமயப் பாகுபாட்டுடன் நடந்து கொள்கின்றனர் என்ற விமர்சனங்கள் பரவலாக முன்வைக்கப்படுவதைக் காண முடிகிறது.

இதுதவிர, தங்களின் பதவி நிலைகளைப் பயன்படுத்தி சமய வஞ்சிப்பைச் செய்வதான தகவல்களும் உண்டு.

ஆக, எம் தமிழ்த்தேசம் ஒற்றுமையாகப் பயணிக்க வேண்டுமாயின், சமய பேதங்களை அடியோடு கைவிட வேண்டும்.

இதற்காக சமயத் தலைவர்கள் ஒன்று கூடி நிலைமைகளை ஆராய்வது அவசியம்.

இல்லையேல் எங்கள் மண்ணில் சமய வக்கிரங்கள் உச்சமடைவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும்.

# அனைத்து கடன் வழங்குனர்களும் இணங்கினால் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க தயார்

## இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இந்தியா அறிவித்துள்ளமையை வரவேற்றுள்ள இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், அனைத்துக் கடன் வழங்குனர்களும் இதற்கு இணங்கும் பட்சத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதில் இலங்கைக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கத்தயாராக இருப்பதாக உறுதியளித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மேற்கொள்கின்ற கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக இந்தியா சர்வதேச நாணய நிதியத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள நிலையில், அதனை மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அமெரிக்கத்தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதில் இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத்தயாராக இருப்பதாகவும், “பாரிஸ் கிளப்“ நாடுகளுடன் ஒருங்கிணைந்து உரியவாறானதும் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான கடன் சலுகைகளை வழங்குவதாகவும் இந்தியா அறிவித்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. அனைத்துக் கடன் வழங்குனர்களும் நியாயமானதும், பக்கச்சார்பற்றதுமான இணக்கப்பாட்டுக்குவரும் பட்சத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதில் இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க அமெரிக்கா தயாராக இருக்கின்றது“ என்று அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இந்தியாவின் அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தாம் சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த கால நிதியுதவி செயற்திட்டத்தை அண்மித்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை இந்த உதவியின் ஊடாக மாத்திரம் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணமுடியாது என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், இருப்பினும் நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசியமான மறுசீரமைப்புக்கள் மற்றும் நம்பிக்கையை வலுவூட்டல் என்பவற்றுக்கான “செயற்திறன் ஊக்கியாக“ இந்த உதவி அமையும் என்று தெரிவித்துள்ளார். (ம-7)

### அமைச்சர் டக்ளஸ் தலையீட்டை தொடர்ந்து

# வடக்கு இ.போ.ச. ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு நிறைவடைந்தது

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியத்தில் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டைத்தொடர்ந்து, போராட்டத்தை முடித்துக்கொள்வதாக இ.போ.ச தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இலங்கைபோக்குவரத்து சபையின் வடபிராந்திய முகாமையாளர் பதவிவெற்றிடமாக இருந்துவரும்நிலையில், தென்னிலங்கையை சேர்ந்த சிங்களவர் ஒருவர் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று பதவியேற்கவிருப்பதாகவும், அவரை வரவேற்க வருமாறும், வடக்கிலுள்ளசாலை முகாமையாளர்களிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அவரது பதவியேற்பிற்கு எதிர்ப்பு தெரிவித்தும், வடக்கிலுள்ள பொருத்தமான ஒருவரை நியமிக்க வலியுறுத்தியும் நேற்று வடக்கிலுள்ள 5 சாலைகளின் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின்எதிர்ப்பை முன்கூட்டியே கணித்த புதிய வடபிராந்திய முகாமையாளர், ஊழியர்கள் பணிக்கு வருவதற்கு முன்னரே, சிலரின் ஒத்துழைப்புடன் அதிகாலை 5.30 மணிக்கே கடமை பதிவேட்டில் கையெழுத்திட்டுவிட்டார்.

நேற்றுகாலையில்பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்த பின்னரே, புதிய முகாமையாளர் கையெழுத்திட்ட விவகாரத்தை ஊழியர்கள் அறிந்து கொண்டனர்.

இந்த விவகாரம்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவிக்கப்பட்டதையடுத்து, போக்குவரத்து அமைச்சருடனும், இ.போ.ச தலைமையகத்திலும் கலந்துரையாடப்பட்டு, வடக்கிலிருந்து பொருத்தமான நால்வரின் பெயர் விபரம் கோரப்பட்டது.

இந்த பட்டியலின்படி, இ.போ.ச வடபிராந்திய கணக்காளர் தலைவராக தெரிவு செய்யப்பட்டு, அவரிடம் புதிய பொறுப்புக்கள் தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது. இ.போ.ச நிர்வாகவிவகாரங்களை அவர் கவனித்துக்கொள்வார்.

புதிதாக நியமிக்கப்பட்டவர் வாரத்தில் இரண்டு நாட்கள் வடபிராந்திய தலைமையகத்திற்கு வந்து காசோலைகளில் கையெழுத்திடுவார் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தலின் பின்னர், நிரந்தரமான ஏற்பாடு செய்வதாகவும் கூறப்பட்டுள்ளது. (ம-7)

## அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கம்பனை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய அபிராமிப்பட்டர் விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு விசேட பூஜையும் அதனைத்தொடர்ந்து தேவபராயணம், அபிராமி அந்தாதி ஓதுதல் நிகழும்.

இரவு 7.30 மணிக்கு மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்டு, விசேட சாத்துப்படியுடன் மங்கள வாத்தியம் சகிதம் அம்பாள் திரு வீதியுலா வந்து அருள் பாலிப்பார். (ம-7)

# நிறைவேற்று அதிகாரத்தின் கைப்பாவையாக பாராளுமன்றம் மாறியுள்ளது

## சபையில் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

பாராளுமன்றம் நிறைவேற்று அதிகாரத்தின் கைப்பாவையாக மாறியுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தை பலப்படுத்தப் போவதாக ஜனாதிபதி தனது அக்கிராசன உரையில் கூறினார். எனினும் உண்மையில் பாராளுமன்றம் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் நிறைவேற்று அதிகாரத்திற்கு முற்றாக அடிபணிந்துள்ளது என்பதை நான் எந்த அச்சமும் இன்றி கூறுகிறேன். பாராளுமன்றத்திற்கு தற்போது கௌரவமோ, சுயாதீனமோ, சம்பிரதாயமோ இல்லை.

பாராளுமன்றம் முற்றாக நிறைவேற்று அதிகாரத்தின் கைப்பாவையாக மாறியுள்ளது. ஜனாதிபதி தனது அக்கிராசன உரையில் பாராளுமன்றத்தின் அனைத்து குழுக்களையும் வலுப்படுத்தி பாதுகாக்க போவதாக முழு உலகத்திற்கும் கூறினார்.

நிதி நிர்வாகம் தொடர்பான புதிய குழுக்கள் அமைக்கப்படும் என்றார்.

இளைய தலைமுறையினருக்கு வாய்ப்பை வழங்கும் கட்டமைப்பை பாராளுமன்றத்தில் உருவாக்குவோம் எனக் கூறினார்.

இவை அனைத்தும் முற்றிலும் பொய். பாராளுமன்றம் முற்றாக தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. பராளுமன்ற குழுக்கள் எடுக்கும் தீர்மானங்கள், வெளிசக்தியால் உடனடியாக மாற்றப்படுகிறது.

பாராளுமன்றத்தை வழிநடத்துவது சபாநாயகர் அல்ல, கண்ணுக்கு புலப்படாத சக்தி எனவும் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைது வேட்டைக்கு எதிராக யாழ்.பல்கலையில் போராட்டம்

(அராலி)

**ஜனாதிபதி ரணிலின் வருகைக்கு எதிராக போராடியவர்களை கைது செய்யும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.பல்கலையில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

தேசிய பொங்கல் நிகழ்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். அதன்போது அவருக்கு எதிராக யாழில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் போராட்டத்தில் ஈடுபட்ட வேலன் சுவாமிகள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலர் இன்னமும் கைது செய்யப்படவுள்ளதாக கூறப்படுகிறது.



அந்தவகையில் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை யாழ். பல்கலைக்கழக வாயிலில் முன்னெடுத்தனர். இதன்போது மாணவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு அஹிம்சை வழிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.(4-6-33-104)

# இரண்டு மாதங்களுக்கு மேல் கட்டணம் செலுத்தாவிட்டால் மின் துண்டிப்பு

(நெளுக்குளம்)

வவுனியாவில் இரண்டு மாதத்திற்கு மேல் மின்சாரக்கட்டணம் செலுத்தாவிட்டால் ஒரு மணித்தியாலம் கால அவகாசம் வழுங்கப்பட்டு மின்சாரத் துண்டிப்பு மேற்கொள்ள மின்சார சபை உத்தியோகத்தர்கள் நேற்றிலிருந்து நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.


குருமன்காடு, வைரவபுளியங்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் மின்சார நிலுவைகள் காணப்படும் வீடுகளுக்கு சென்ற மின்சார சபை உத்தியோகத்தர்கள் இரண்டு மாதத்திற்கு மேல் தொடர்ந்து மின்சாரப்பட்டியல் நிலுவை செலுத்தாத மின் பாவனையாளர்களிடம் மின்சார நிலுவைகளை ஒரு மணித்தியாலய கால அவகாசத்தில் செலுத்திக்கொள்ளுமாறும் அவ்வாறு செலுத்தத்தவறியவர்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகளுக்கு மின்சாரத்துண்டிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

இதையடுத்து மின்பாவனையாளர்கள் தமது மின்சார நிலுவை கட்டணங்களும் செலுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

தற்போது எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மாலை மற்றும் இரவு வேளைகளில் இரண்டு மணித்தியாலங்கள் இருபது நிமிடங்கள் மின்சாரத் துண்டிப்பு நாடளாவிய ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)

# மணல் அகழ்வில் ஈடுபடும் டிப்பர்களால் வீதிகள் சேதம்

## புத்துவெட்டுவான் கிராம மக்கள் சுட்டிக்காட்டு



(அக்கராயன்)

மணல் அகழ்வினால் சேதமடைந்த புத்துவெட்டுவான் கொக்காவில் வீதியினை புனரமையுங்கள் என புத்துவெட்டுவான் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2010 ஆம் ஆண்டின் பின்னர் நிரந்தர வீதி உருவாக்கப்பட்ட போதிலும் ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெற்று பிற இடங்களுக்கு புத்துவெட்டுவான் கொக்காவில் வீதி வழியாக டிப்பர்களில் கொண்டு செல்லப்படுவதன் காரணமாக வீதியில் பல இடங்களில் பெரும் குழிகள் உருவாகியுள்ளன.

விவசாயத்தினை நம்பியுள்ள இக்கிராமத்தில் மணல் அகழ்விற்காக வீதி உருவாக்கப்பட்டது போல் டிப்பர்களினால் வீதி சேதமடைந்து கொண்டிருக்கின்றது.

இவ் வீதியினை பயன்படுத்துகின்ற 350 வரையான குடும்பங்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன. ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

இக்கிராமங்களில் இருந்து கிளிநொச்சி நகரத்திற்கு விவசாய உற்பத்திகளை எடுத்துச் செல்வதில் நெருக்கடி காணப்படுகின்றது.

துணுக்காய் பிரதேச செயலகத்திலும் கிராம மட்டங்களிலும் நடைபெற்ற கூட்டங்களில் புத்துவெட்டுவானுக்கும் கொக்காவிலுக்கும் இடையில் பொலிஸ் இராணுவம் இணைந்த காவல் அரண் அமைக்கப்பட வேண்டும் என ஐந்தாண்டுகளாக கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அவை அமைக்கப்படவில்லை. இதன் காரணமாக வீதியினை சேதமடையும் வகையில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு டிப்பர்கள் மூலம் நடைபெறுகின்றது எனவும் தெரிவித்துள்ளனர்.(4-6-350)

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வவுனியாவில் கட்டுப்பணம் செலுத்தியது

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி நேற்று கட்டுப்பணம் செலுத்தியது.

ஜனநாயக தமிழ்த் தேசியக். கூட்டமைப்பின் வவுனியா மாவட்டத்திற்கான தேர்தல் முகவர் ஜி.ரி.லிங்கநாதன் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் தமது கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள மாநகரசபை உட்பட 4 உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதற்காகவே இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. இதன்போது வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் பிரசன்னமாகியிருந்தனர். (4-6-299)

# வெள்ளம் தேங்குவதால் போக்குவரத்துக்கு சிரமம்

## செல்வபுரம் கிராம மக்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு செல்வபுரம் கிராமத்தின் வெள்ளம் வழிந்தோடுவதற்கு அதிகாரிகள் வழியேற்படுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். மழை காலத்தில் வீதிகளில் பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக கிராமத்தின் மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மகா வித்தியாலயம் வட்டுவாகல் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் தமது பாதணிகளை மழை வெள்ளத்தில் நனைத்தபடி செல்வதன் காரணமாக நோய்த் தாக்கத்திற்கு உட்படுவதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

500 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் கடந்த பத்தாண்டுகளில் வெள்ளம் வழிந்தோடுவதற்கான நிரந்தர தீர்வுகள் காணப்படவில்லை. வட்டுவாகல் ஆறு, பெருங்கடல் என்பவற்றிற்கு வெள்ளம் வழிந்தோடக் கூடிய வாய்க்கால்கள் அமைக்கப்பட வேண்டும்.

இதற்கான வழிகளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மேற்கொள்ள வேண்டும். மழை பெய்கின்ற போது வீதிகளிலேயே வெள்ளம் தேங்கி நிற்பதனால் நோய்கள் பரவக் கூடிய அபாய நிலை காணப்படுகின்றது. நோய்த் தாக்கங்களில் இருந்து தற்பாதுகாத்துக் கொள்ளுங்கள் என தெரிவிக்கும் அதிகாரிகள் வெள்ளம் வழிந்தோடுவதற்கான வழிகளையும் உருவாக்க வேண்டும் என மேலும் தெரிவித்தனர். (4-6-350)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 370 | 350 | 400 | 450 |
| தக்காளி | 220 | 200 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 200 |
| கோவா | 80 | 100 | 100 | 150 |
| கரட் | 250 | 200 | 250 | 300 |
| பூசணி | 80 | 140 | 140 | 150 |
| புடோல் | 250 | 180 | 200 | 220 |
| வாழைக்காய் | 200 | 200 | 120 | 180 |
| சின்ன வெங்காயம் | 600 | 600 | 800 | 700 |
| பெரிய வெங்காயம் | 150 | 190 | 180 | 200 |
| பாகற்காய் | 500 | 400 | 400 | 500 |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 350 |
| லீக்ஸ் | 450 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 450 | 350 | 350 | 450 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1600 | 1500 |
| போஞ்சி | 300 | 300 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 200 | 350 | 300 | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 150 | 120 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 300 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 420 | 350 | 550 | 600 |
| முள்ளங்கி | 60 | 80 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | -- | -- | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய 2022 பாடசாலை கல்வி யாண்டின் மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடைந்து பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை க.பொ.த உயர்தர பரீட்சைகளும் எதிர்வரும் திங்கட் கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் பெப்ரவரி 17ஆம் திகதி வரை நடைபெற வுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பெண் ஒருவரது...

சடலமாக காணப்படுவது யார் என இதுவரை அடையாளம் காணப்பட வில்லை.

பொலிஸார் சடலத்தை அடையாளம் காண்பது தொடர்பாகவும் மரணத்திற் கான காரணம் தொடர்பாகவும் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## யாழ்.நகரில்...

வியாபாரத்திற்காக கொண்டு வந்து விற்பதற்கு தயார் நிலையில் இருந்த போது யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவுக்கு கிடைத்த இர கசியத் தகவலுக்கமைய குறித்த சந் தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை முன்புள்ள கடையொன்றின் உரிமையாளரே ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார். (ம-7,33,60,104)

## யாழ்.மாநகர...

யாழ். மாநகர சபையில் வெற்றிட மாக உள்ள முதல்வர் பதவிக்கு உறுப் பினர்களில் ஒருவரைத் தெரிவு செய்வ தற்கான கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இதன்போது 24 உறுப்பினர்கள் கூட்ட மண்டபத்தில் கூடியிருந்தனர். கூட்டத்துக்குத் தேவையான நிறை வெண் இருப்பதனால் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதாக உள்ளூ ராட்சி ஆணையாளர் செ.பிரணவ நாதன் அறிவித்ததோடு, முதல்வருக் கான முன்மொழிவுகளைக் கோரினார்.

தமிழரசுக் கட்சியின் சார்பில் முன் னாள் முதல்வர் இம்மானுவல் ஆனல் டின் பெயர் முன்மொழியப்பட்டது.

இதனையடுத்து முன்மொழிவை ஆட்சேபிப்பதாகத் தெரிவித்து ஈ.பி.டி.பி ஐச் சேர்ந்த எம்.ரெமீடியஸ் சபை யிலிருந்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் சபையை விட்டு வெளியேறினர்.

இதனைத் தொடர்ந்து தெரிவைக் கொண்டு நடத்துவதற்குத் தேவை யான கோரம் இல்லாத காரணத்தி னால் கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாக வும் தெரிவுக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் உள்ளூ ராட்சி ஆணையாளர் அறிவித்தார். (ம-7,33,104)

## உள்ளூராட்சி...

லாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அந்தக் கடிதத்தில் மாநகர சபை கூட்டம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் 24 பேர் கலந்து கொண்டிருந்தனர். "கூட் டத்தில் 24 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருப்பதனால் - தேவையான நிறைவெண் இருப்பதனால் கூட்டம் ஆரம்பிக்கப்படுகிறது என உள்ளூ ராட்சி ஆணையாளர் தெரிவித்து முதல் வர் தெரிவுக்கான முன்மொழிவைக் கோரினார்.

முதல்வராக தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் இ.ஆனல்ட்டின் பெயர் முன்மொழியப்பட்ட பின், வேறேதும் முன்மொழிவுகள் இல்லாத நிலையில் முதல்வராக இம்மானுவல் ஆனல்ட் அவர்கள் தெரிவாகும் ஏது நிலை காணப்பட்டது.

இந்த நேரத்தில் முன்மொழிவை ஆட்சேபித்து தாம் வெளியேறுவதாக, சபையின் நான்கு உறுப்பினர்கள் வெளியேறினர்.

அந்த நேரத்தில் சட்ட ஏற்பாடுகளுக் குப் புறம்பாக தாங்கள் கூட்டத்தை ஒத்திவைப்பதாக ஆணையாளர் அறி வித்தார். இது நியாயமற்ற ஒரு அறி விப்பு.

கூட்டம் ஆரம்பிக்கப்பட்ட நேரத் தில் தேவையான கோரம் இருந்த போதிலும், தெரிவுக்காக வேறு முன் மொழிவு இல்லாத காரணத்தினாலும் நான்கு உறுப்பினர்களின் வெளியேற் றம் காரணமாக கோரமில்லை என்று எந்தவொரு உறுப்பினரும் ஆட்சேப னையும் தெரிவிக்காத காரணத்தினால் முன்மொழியப்பட்டபடி இம்மானுவல் ஆனல்டை முதல்வராக ஏகமனதாக அறிவிப்பதே பொருத்த மானதென நாங்கள் கருதுகிறோம் என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## நல்லிணக்கத்...

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் 100ஆவது ஆண்டு பூர்த்தி விழாவில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக் கையில்,

நாம் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்துள்ளோம். அதாவது இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை கள் மற்றும் அவர்கள் எவ்வாறு நல் லிணக்கத்துக்குப் பங்களிக்கப் போகின் றார்கள் என்பது பற்றி நாம் ஆராய்ந்தோம். முதற்படி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாம் மீண்டும் கட்சித் தலைவர் களையும் சந்திக்கவுள்ளோம். இந்தக் கலந்துரையாடல் மூலமாக நாம் பல முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

அதேபோன்று சிங்களவர்களுட னும் நாம் பேச்சு நடத்தவுள்ளோம். அதிலும் பல குழுக்கள் உள்ளன. சிலர் சாதி அடிப்படையில் ஒதுக்கப்பட் டுள்ளனர். மேலும் பலரை சமூகம் ஏற்றுக் கொள்வ தில்லை. இது போன்ற நீண்ட காலப் பிரச் சினைகளுக்கு தீர்வு காண்பதற் காகவே எனக்கு சமூக நீதி ஆணைக்குழு வொன்றை ஸ்தாபிக்க வேண் டிய தேவையுள் ளது.

ஒவ்வொரு வருக்கும் தனித் தனி பிரச்சினை இருப்பதன்காரண மாகவே அவர்க ளுக்கு முன்னு ரிமை அளிக்கும் நோக்கில் நாம் அனைவரையும் ஒன்றாக இணைத் துப் பேச்சுவார் த்தை நடத்த வில்லை. எனவே பிரச்சினைகளை கட்டம் கட்டமாக தீர்ப்போம் என் றார். (ம-7)

## தேர்...

பாராளுமன்றத் தில் நிறைவேற் றப்பட்டது.

சட்டமூலத்திற்கு ஆதரவாக 97 வாக்குகளும் எதி ராக 36 வாக்கு களும்கிடைத்தன.

ஐக்கிய மக் கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள் ளிட்ட பல அரசி யல் கட்சிகளின் உறுப்பினர்கள் சட்டமூலத்திற்கு எதிராக வாக் களித்தனர். (ம-7)

கனடாவில் வேலைவாய்ப்பு, கல்வி-கருத்தரங்கு
Hotel Managment / Health care போன்ற துறைகளில் Work Permit எடுப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் Student Visa விற்கான ஆலோசனைகளும் அனுமதிகளும் கனடாவிலிருந்து வருகைதந்திருக்கும் அங்கீகரிக்கப்பட்ட கனடிய குடிவரவு ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும்
CANADA MIGRATION PILOT
திகதி- 21.01.2023 (சனிக்கிழமை) நேரம்- 12 மணி
கட்டணம் :- 2000/= (மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்)
CIMS COLLEGE 0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
(C-5819)

## தொடர்ச்சியாக...

யாவார்.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி இவர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக் குக் கொண்டு வரப்பட்டார். கடந்த 10ஆம் திகதி இவர் வயிற்று வலி காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி இவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்று மருத் துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

மரண விசாரணைகளை யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

தொடர்ச்சியான ஹெரோயின் பாவ னையே இவரது உயிரிழப்புக்குக் கார ணம் என்று விசாரணையில் தெரி விக்கப்பட்டது. (ம-7,33,60,104)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1460
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 1 3 5 9 8 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1035
V 54 61 73 74
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.19
சீட்டிழுப்பு இலக்கம் 3247
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
O 02 27 38 41
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 19/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1353
S 05 11 27 41 65

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.19
சீட்டிழுப்பு இலக்கம் 314
மகரம் 02 29 35 40 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/19
சீட்டிழுப்பு இலக்கம் 5005
M 0 7 8 6 2 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1980
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.01.19
தினம் வியாழக்கிழமை
P 29 33 57 59
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,520,960/-
DLB

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.19
சீட்டிழுப்பு இல : 4141
வர்ணம் : சிவப்பு
ரூ. 5,063,660/-
வெற்றி இலக்கங்கள் 23 24 40 53
N
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,020,840/-
திகதி 2023-01-19
வெற்றி வாரம் 3692
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 05 22 39 61
ரூ. 10,317,660/-
DLB


கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 07 06 12 15 35
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1156
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2023.01.19 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 299,126,126.20
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 563
திகதி 2023-01-19
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 31 43 66
விதி எண் 02
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 16,191,784/-
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1806
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.01.19
ரூ. 4,230,140/-
வெற்றி இலக்கங்கள் 19 33 54 74
G
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மண்ணின் மைந்தனும் சிவநெறிச் சீர்வாழ்வில் திருமுறைத் தொண்டாற்றிய பெருமகனுமாகிய



உயர்திரு

## ஐயாத்துரை கனகசபாபதி

அவர்களை பாராட்டி கௌரவிக்கும் மங்களவைபவம்

இடம் :- வேப்பந்திடல் திவாகர் நற்பணி மண்டபம்.

காலம் :- 2023.01.21 சனிக்கிழமை பகல் 10.00 மணி

**மணி விழா ஏற்பாடு வேப்பந்திடல் ஸ்ரீமுத்துமாரி அம்மன் பரிபாலன சபை**

**மண்டைதீவுத் திருவூரின் ஆத்மீக அடையாளமாகத் திகழும் இத் திருத் தொண்டரை ஏற்றுவோம் போற்றுவோம் வாரீர்**

ஆலயங்களின் அறங்காவலர்கள், ஆலய பரிபாலன சபையினர், சமூகத் தொண்டர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-5818)

## கடை வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம் NEW MARKET அதனை அண்டிய பகுதிகளில் GARMENTS வியாபாரம் செய்வதற்கு ஏற்ற கடை வாடகைக்கு தேவை.

தொடர்பு: 077 770 1208 (வட்ஸ் அப்)
veshanker@yahoo.com

(14326)

## காணியும் வீடும் விற்பனைக்கு

காங்கேசன்துறை யாழ்ப்பாணப் பிரதான வீதியில் பொலிஸ் ஆஸ்பத்திரிக்கு எதிர்ப்பக்கமாக குரு வீதிக்கு அருகாமையில் தெற்கு பக்கம் இரண்டு பரப்பு காணியும் தற்போது உபயோகத்தில் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 353 5822 / 071 860 6576

(14320)

## அகரம் உயர் நிலைக் கல்லூரி

**AHARAM HIGH STANDARD COLLEGE**

காங்கேயன் துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

புதிய தரம் 06க்கு தமிழ் மொழி மூல ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் ஆரம்பம்

05.02.2023 [ஞாயிற்றுக்கிழமை]
தைப்பூச நன்னாளில்
நேரம் காலை - 7.40 - 8.40

அனுமதிகளை 18.01.2023 இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 3.00 மணியில் இருந்து 6.00 மணி வரை
சனி, ஞாயிறு தினங்களில் காலை 7.00 மணியில் இருந்து மாலை 6.00 மணிவரை
பெற்றுக்கொள்ளமுடியும்.

(14297)

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
இயக்குநர்

## பாற்குட பவனி

(யாழ்ப்பாணம்) சங்கரத்தை குளத்தடி அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 11.01.2023 அன்று ஆரம்பமாகி 20.01.2023 இன்று வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறுகிறது.

தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி வீரபத்திர சுவாமி ஆலயத்திலிருந்து காலை 7.00 மணிக்கு பாற்குடபவனி இடம்பெற்று 108 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (ம-7)

## யா/தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம் தொண்டைமானாறு


TOWARDS LIGHT

# அகவை அறுபதில்

### எமது பிரதி அதிபர்

## உயர்திரு தம்பு இராஜசேகரன்

(இலங்கை ஆசிரியர் சேவை 1)



பொலிகை மண் பெற்றெடுத்த பொற்குணசீலனே
பொறுமைக்கு இலக்கணம் உம்மிடமே கற்றிடலாம்
பாரினிலே உம்மைப்போல பாரதத்தில் தர்மன் ஐயா
பிரதியீடு செய்ய முடியாத பிரதி அதிபர் நீ ஐயா
சினந்தொரு வார்த்தை சிறுபொழுதும் பேசாமல்
சிரிப்புடனே சிக்கல்களை திரை நீக்கம் செய்வீரே!
ஆளறிந்து வேலை செய்யும் அற்புத அதிபர் ஐயா!
ஆக்கினைகள் செய்யாமல் அறுவடை செய்யும்
நுட்பம் பலவற்றை எமக்கும் தருவீரோ!
பல வருட சேவை என்று பார்ப்போர் எல்லாம் பேசுகிறார்
பழைய மாணவர் முதல் பட்டி தொட்டிவரை
உம் சேவை பேசாத மனிதரைக் காணோமே!
சந்நிதியான் புகழ்போல உம் புகழும் இருக்கும் ஐயா!
வாழ்த்துக்கள் பல கூறி பணிகிறோம் உம் பாதம்

## கல்விப்பணி

- 29.03.1990 - ஆசிரியர் யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி
- 05.05.2010 - ஆசிரியர் யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி
- 25.08.2023 - ஆசிரியர் (பகுதி நேரம்) யா/கொற்றாவத்தை அமெரிக்கன்மிசன் த.க.பா.
- 06.05.2010 - ஆசிரியர் (பகுதி நேரம்) யா/தேவரையாளி இந்துக் கல்லூரி
- 18.03.2014 - பிரதி அதிபர் யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி

**20.01.2023 இன்று எமது பிரதி அதிபர் திரு த.இராஜசேகரன் அவர்கள் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். ஓய்வு காலத்தில் அவர் சீரும் சிறப்பும் பெற்று நல்வாழ்வு வாழ எல்லாம்வல்ல தொண்டைமானாறு சித்திவிநாயகப் பெருமானையும், ஆற்றங்கரை சந்நிதி வேலனையும் வேண்டுகின்றோம்.**

(C-5817)

**பாடசாலைச் சமூகம் - யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org